சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 07.01.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **100/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-8 |
| சாட்சியின் பெயர் | : | மாறன் |
| தந்தை பெயர் | : | அழகேசன் |
| கிராமம் | : | கிடாரம்கொண்டான் |
| தாலுக்கா | : | திருவாரூர் |
| தொழில் | : | கோழிக்கடை |
| வயது | : | 30 |

2026 ம் ஆண்டு ஜனவரி மாதம் 07 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திரு. G. சுப்பையன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1 முதல் 7, 10 எதிரிகள் ஆஜர். 8 மற்றும் 9 எதிரிகள் PT Warrant மூலம் ஆஜர் படுத்துப்பட்டுள்ளார்கள். அரசு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கிடாரம்கொண்டான் என்ற ஊரில் கோழிக்கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. அஹரதிருநல்லூரை சேர்ந்த செல்வமணி மகன் குமரேசன் என்பவரை எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை. என்னிடம் காட்டப்படும் 1ம் எதிரி சதீஷ்குமார் அளித்ததாக சொல்லக்கூடிய ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடைய கையொப்பம் அல்ல.

(இந்த சாட்சி அரசு தரப்பு வழக்கினை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை என்பதால் இந்த சாட்சி குறுக்கு விசாரணையில் கேள்விகள் கேட்பது போல் இந்த சாட்சியிடம் கேள்விகள் கேட்க அனுமதிக்கவேண்டுமென அரசு தரப்பு வழக்கறிஞர் வாய்மொழியாக கேட்டுகொண்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகிறது.)

<u>அரசு தரப்பு சாட்சி விசாரணை தொடர்ச்சி</u>

கடந்த 17.11.2021 ஆம் தேதி காலை 11.10 மணியளவில் திருவாரூர் தாலுக்கா காவல் நிலைய குற்ற வழக்கில் விசாரணை செய்து வந்த திருவாரூர் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் திருவாரூரில் உள்ள கானூர் சோதனை சாவடி அருகே நடந்து வந்து கொண்டிருந்த 1ம் எதிரி சதீஷ்குமார் என்பவரை கைது செய்து செய்ததாகவும், அப்போது நானும் சாட்சி பொய்யாமொழி என்பவரும் உடன் இருந்ததாகவும், 1ம் எதிரி சதீஷ்குமார் அப்போது தானாக முன்வந்து ஒரு குற்ற ஒப்புதல் வாக்குமூலம் அளித்ததாகவும், அதை திருவாரூர் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் பதிவு செய்து எதிரியிடம் கையொப்பம் பெற்றார் என்றும், அதில் நானும் சாட்சி பொய்யாமொழி என்பவரும் சாட்சியாக இருந்தோம் என்றும், அதில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள்

உண்மையில் எனக்கு தெரிந்தவர்கள் என்றும், அவர்களை காப்பாற்றும் நோக்கோடு உண்மையை மறைத்து நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:** இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.01.07 17:03:15 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.